முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,
சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| OS 05/2015 |
| பி.சா.1(சுப்பிரமணியன்) |
| நாள் 23.12.2020 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)

நான் சொத்து வாங்கிய பிறகு அந்த விவரத்தை வருமான வரி கணக்கில் காட்டவில்லை. உடன்படிக்கை செய்து கொண்ட விவரத்தையும், அதன்படி வாதியின் அப்பாவிற்கு கொடுத்த தொகையை வருமான வரி கணக்கில் காட்டவில்லை. உடன்படிக்கை செய்த தொகையில் ரூ.2,00,000/–த்தை என் மனைவியின் நகையை அடமானம் வைத்து கொடுத்தேன். அவ்வாறு 2 லட்சம் மனைவியின் நகையை அடமானம் வைத்து கொடுத்ததாக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரிய வழக்கிலோ, இந்த வழக்கின் எதிர்வழக்குரையிலோ, முதல் விசாரணையிலே சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த விவரத்தை முன்பு சொல்லாமல் தற்போது வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தந்தையிடம் 24.02.2012 ல் 79 1/2 சென்ட், கிணறு, வழி நடை ஆக மொத்தம் 85 1/2 சென்டும் கிணற்றில் 1/6 பாகமும் வாங்கினேன். சென்ட் ரூ.2500 என்ற விலையில் வாங்கினேன். தடத்திற்கு தனி மதிப்பு. கிணற்றிற்கு தனி மதிப்பு. வா.சா.ஆ 3 ல் 77 சென்ட் புஞ்சை பூமி கிரயம செய்யப்பட்டுள்ளது. அந்த 77 சென்டிற்கு ஏறக்குறைய சென்டிற்கு ரூ.2500 ஆகும். பாக்கி உள்ள 2 1/2 சென்டிற்கும் அதே தொகை தான். தட வழி பாத்தியம் 8 சென்ட் வாங்கினேன். அதற்கு ஒரு சென்டிற்கு ரூ.27 ஆகும். வா.சா.ஆ 3 ல் கண்ட சொத்தை அப்போதிருந்த சந்தை மதிப்பிற்கு கிரயம் வாங்கினேன். கிரயம வாங்கிய தேதிக்கு ஓராண்டிற்கு பின் சொததின் சந்தை மதிப்பு நிறைய மதிப்பு ஏறிவிட்டது. ஏறக்குறைய 250 சதவீத அளவிற்கு விலை ஏறிவிட்டது. வா.சா.ஆ 3 சந்தை மதிப்பிற்கு கிரயம் செய்யப்படவில்லை என்றும் , அரசு வழிகாட்டி மதிப்பிற்கு தான் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. 5.11.2012 ல் நான் வாதியின் தந்தையுடன் உடன்படிக்கை செய்து கொண்டேன். உடன்படிக்கை சொத்தும் கிரயம் செய்து கொண்ட சொத்தும் ஆதியில் 06.07.1957 பத்திரப்படி கருப்பண கவுண்டர் மகன் பெரியண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. 6.07.1957 பத்திரத்தில் காட்டியுள்ள சொத்துக்கள் அனைத்தும் அவருக்கு பூர்வீக சொத்துக்கள். மேற்படி பத்திரப்படி பெரியண்ண கவுண்டருக்கும வாதியின் தந்தை மைனர் பழனிசாமிக்கும் சேர்ந்து ஏ செட்டியூல் சொத்துக்கள் பிரிந்தது என்றால் வாதியின் தந்தை மைனராக இருந்ததால் கார்டியனாக பெரியண்ண கவுண்டருக்கு பிரிந்தது. வாதியின் தந்தை மைனர் பழனிசாமிக்கும் பெரியண்ண கவுண்டருக்கும் சேர்ந்து தான் ஏ செட்டியூல் சொத்து கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி செட்டியூல் சொத்து என் தந்தை துரைசாமிக்கு தனிப்பட்ட வகையில் ஒதுக்கப்பட்டது. சி செட்டியூல் சொத்து

வெங்கடாசலத்திற்கு தனியாக பிரிந்தது. தாவா சொத்தின் பழைய சர்வே எண் 562, 563 பி. அதன் தற்போதைய ரீசர்வே எண் 527/1. ரீ.ச 527/2 என்பது வெங்கடாசலத்தின் நிலத்திற்கு சம்பந்தப்பட்டதாகும். ரீ.ச எண் 527/2 ல் வாதிக்கோ, வாதியின் தந்தைக்கோ உரிமை இல்லை. பெரியண்ண கவுண்டருக்கு பிரிந்த எ செட்டியூல் சொத்து 1 ஏக்கர் 11 சென்ட். அதை பழனிசாமி தனக்கான தனிப்பட்ட சொத்தாக பிரித்துக் கொண்டார். பழனிச்சாமிக்கு தனிப்பட்ட சொத்தாக பிரித்துக் கொண்டார் என்பதை காட்ட பதிவு செய்த ஆவணம் இல்லை. பட்டா உள்ளது. வெங்கடாசலத்தின் சொத்தை 1ஏக்கர் 93 சென்டை நான் வாங்கியுள்ளேன். நான் என் அம்மா பெயரில் வாங்கியுள்ளேன். என் அம்மா பெயரில் வாங்கிய சொத்துக்களுக்கு தென்புறம் தான் வாதியின் சொத்து உள்ளது. ரீச. 527/4 என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். பெரியண்ண கவுண்டருக்கு கச எண் 562,563 பி ல் 3 ஏக்கர் 91 சென்ட் பாத்தியம். வா.சா.ஆ 1 ல் 2 ஏக்கர் 80 சென்ட் தான் பெரியண்ண கவுண்டர் குடும்பத்திற்கு பாத்தியம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்திற்கு சம்பந்தப்படட பழைய சர்வே எண் 562, 563 பி. பழனிசாமிக்கு ஒரு ஏக்கர் 11 சென்ட் போக பாக்கி 2 ஏக்கர் 80 சென்டை என் தாத்தா பெரியண்ண கவுண்டர் ஒரு நாச்சாயமமாளுக்கு விற்று விட்டார். அந்த பத்திரத்தை வாதி தாக்கல் செய்துள்ளார். அதே நாச்சாயம்மாளிடம் வாதியின் அப்பா 40 சென்டை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். எனது கூற்றுப் படியே வாதியின் அப்பாவிற்கு ஏற்கனவே 1 ஏக்கர் 11 சென்ட் மற்றும் 40 சென்ட் சேர்த்து 1 ஏக்கர் 51 சென்ட் பாத்தியம். வாதியின் அப்பா பழனிசாமிக்கும் பெரியண்ண கவுண்டருக்கும் நிரந்தர பாகப்பிரிவினை எழுதப்படவில்லை என்றால் சரிதான். ஒரு ஏக்கர் 51 சென்டிற்கு மேல் விற்பதற்கு வாதியின் தந்தைக்கு உரிமை அல்ல என்றால் சரியல்ல. அதற்கு காரணம் கிணற்றிற்கு போகிற பாதை 8 சென்டும் வாதியின் அப்பாவிற்கு தனிப்பட்ட பாத்தியம். மேற்படி 8 சென்ட்டில் எனக்கோ, வெங்கடாசலம் வகையறாவிற்கோ பாத்தியம் இல்லை. கிணற்றை சுற்றியுள்ள இடத்தில் 7 1/2 சென்ட் வாதியின் அப்பாவிற்கு தனித்து பாத்தியம். அந்த 7 1/2 சென்டில் எனக்கோ, வெங்கடாசலம் வகையறாவிற்கோ பாத்தியம் இல்லை என்றால் சரி. வாதியின் அப்பா பழனிசாமிக்கு 1 ஏக்கர் 66 1/2சென்ட் தனித்து பாத்தியப்பட்டதாகும்.

(வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Uplodaded by

SS